வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 09.01.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 09 பக்கங்கள் : 08




### காற்றழுத்த தாழ்வு மண்டலம் இரு வகை நகர்வு பாதையில்

# வடக்கில் வெள்ள அபாயம் அல்லது மலையகத்தில் மீளவும் நிலச்சரிவு!

**பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை**

யாழ்ப்பாணம், ஜனவரி. 09

**நகர்ந்து வரும் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் நகர்வு இரு வகை பாதையாக உள்ளது. இதன்படி, ஒன்றில் வடக்கு மாகாணத்தில் 4 நாட்களில் 600 மில்லிமீற்றருக்கு அதிகமான மழை கிடைக்கும் இதனால் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படும். மற்றையதில், மலையகத்தில் மீண்டும் நிலச்சரிவுகள் இடம்பெறும் - இவ்வாறு காலநிலை அவதானிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை தலைவருமான நா. பிரதீபராஜா எச்சரித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அவதானிப்பு அறிக்கையின் விவரம் வருமாறு,

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்கே பொத்துவிலில் இருந்து 236 கி.மீ. தென் கிழக்கு திசையில் காணப்படும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்ச்சியாக வலுப்பெற்று வருகிறது. இது, தொடர்ச்சியாக மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வருகிறது.

ஆரம்பத்தில் மாதிரிகளிடையே அதன் நகர்வுப் பாதை தொடர்பில் ஒருமித்த கருத்து காணப்பட்டது. ஆனால், தற்போது மாதிரிகள் இரண்டு வகையான நகர்வு பாதைகளை காட்டுகிறது.

நகர்வு - 1 ஏற்கனவே இருந்தது போன்று நாட்டின் கிழக்கு கரையை அண்மித்து பின் வடக்கு திசை நோக்கி நகர்ந்து, அதன் பின்னர் நாளை சனிக்கிழமை மாலை மன்னார் வளைகுடா கடற்பகு திக்குள் பிரவேசித்தல்.

நகர்வு - 2 நாட்டின்

07

## மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம்!

**யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு**



இ.ராஜ்குமார்

யாழ்ப்பாணம், ஜன. 09

மறு அறிவித்தல்வரை மீனவர்கள் தொழிலுக்காக கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் தீவுகளுக்கான கடல் போக்குவரத்துகளும்

07

## வடக்கில் காணிகள் விடுவிப்பு: சாதகமான தீர்வுக்கு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 09

வடக்கில் காணி விடுவிப்பு, வீதிகளை திறப்பது மற்றும் பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினர் முன்வைத்த கோரிக்கைகளுக்கு சாதகமான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்த முன்னெடுப்புகளை மேற்கொள்கையில் ஏற்படும் தடைகள், அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பத்தாவது

07

**கொழும்பு திட்டம் உள்ளிட்ட**

## 66 அமைப்புகளிலிருந்து அமெரிக்கா விலகியது!

வாஷிங்டன், ஜன. 09

கொழும்பு திட்டம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள், ஐ. நா. சார்ந்த அமைப்புகளென 66 அமைப்புகளிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு , ஐக்கிய

07

## தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு; இந்தியா தலைமை வகிக்கவேண்டும்

**நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு**

கொழும்பு, ஜன. 09

சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாப்புக்கு கூட்டு அர்ப்பணிப்பு அவசியம். வளர்ந்துவரும் நெருக்கடி நிலைகளை எதிர்கொள்ள கூட்டாக பதிலளிக்க வேண்டும். இதற்கு பிராந்திய ஒத்திசைவு அவசியம். வலுவான தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கு இந்தியா தலைமை வகிக்க வேண்டும் - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், உலகளாவிய பாதுகாப்பு முன்னேற்றங்களுக்கு மத்தியில் தெற்காசியாவின் வலுவான ஒத்துழைப்பு அவசியம்.

07

## கண்டியில் நிலநடுக்கம்

கொழும்பு, ஜன. 09

கண்டி மாவட்டத்தின் உடுதும்பர பகுதியில் தேவஹந்தியா கிராமத்தில் நேற்று மாலை 5.05 மணியளவில் சிறியளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் 2.2ஆக பதிவான

07

### கச்சதீவு அந்தோனியார் திருவிழா:

## இந்தியா, இலங்கையிலிருந்து 8 ஆயிரம் பக்தர்கள் திரள்வர்

இ. ராஜ்குமார்

யாழ்ப்பாணம், ஜன. 09

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் இலங்கையிலிருந்து 4 ஆயிரம் பேரும் இந்தியாவிலிருந்து 4 ஆயிரம் பேருமாக 8 ஆயிரம் பேர் இந்தத் தடவை பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா எதிர்வரும் பெப்ரவரி 27, 28ஆம் திகதிகளில்

07

## ஹரிணிமீதான நம்பிக்கையில்லா பிரேரணை இன்று சபாநாயகரிடம்!

கொழும்பு, ஜன. 09

கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையில் எதிர்க்கட்சியை சேர்ந்த 50 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரேரணையில் மேலும் பல உறுப்பினர்கள் கையொப்பமிடவுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து கல்வி அமைச்சரான

07

### லசந்த படுகொலைக்கு:

## இந்த அரசில் நீதி கிடைக்காவிடின் இனி எந்த அரசிலும் கிடைக்காது

**ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறது**

கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவுக்கு இந்த அரசாங்கத்தில் நீதி கிடைக்காவிடின் இனி எந்த அரசாங்கத்திலும் நீதி கிடைக்காது என்று ஐக்கிய மக்கள் சக்தியின்

07

## 21 பவுண் நகைகள் கரவெட்டியில் களவு

சி. தில்லைநாதன்

வடமராட்சி, ஜன. 09

வீட்டிலிருந்தவர்கள் உறங்கிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 21 பவுண் நகைகள் களவாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கரவெட்டி மத்தி, கோவிற் சந்தை பகுதியில் நெல்லியடி - கொடிகாமம் வீதியிலுள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

நேற்று நள்ளிரவு கடந்து

07

## கணக்காய்வாளர் நாயகம் இன்மையால் அராஜகநிலை

**ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு**

கொழும்பு, ஜன. 09

நாட்டில் கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிக்காமல் அரசாங்கம் காலந்தாழ்த்தி வருவதன் மூலம் நாடு பல துறைகளில் அராஜக நிலையை நோக்கிச் சென்றுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், ஒரு வருட

07

## குளங்களின் கீழ் பகுதிகளில் வசிப்போருக்கு எச்சரிக்கை!

**முல்லைத்தீவு அனர்த்த முகாமைத்துவ பிரிவு**

முல்லைத்தீவு, ஜன. 09

கனமழை காரணமாக, குளங்களில் வான்பாயும் அளவு மேலும் அதிகரிக்கும் நிலைமை உள்ளது. இதனால் குளங்களின் கீழ்ப்பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது - என்று முல்லைத்தீவு அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அந்தப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேப்பாபுலவு காணி விவகாரம்:

# இராணுவத்தினர் பொய்யுரைப்பதாக ஜனாதிபதியிடம் ரவிகரன் முறையீடு!

கொழும்பு, ஜன. 09

முல்லைத்தீவு - கேப்பாப்புலவு காணி விடுவிப்பு விவகாரத்தில் இலங்கை இராணுவம் பொய்யுரைத்துள்ளது என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

கேப்பாபுலவு பகுதியில் 159.5 ஏக்கர் காணியை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனை குழுக்கூட்டத்தின் போதே, பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதியிடம் இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில், கேப்பாபுலவில் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ரவிகரன், ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார். (அ)

# பாலின அடிப்படையில் பிரதமர்மீதான தாக்குதல்கள் கண்டனத்துக்குரியவை

### ரஜீவன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 09

பிரதமர்மீது நடத்தப்படும் தனிநபர் மற்றும் பாலின அடிப்படையிலான தாக்குதல்களை வன்மையாக கண்டிப்பதாக ஆளும் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அரசாங்கம் அண்மையில் இடம்பெற்ற தரம் 06 பாடப்புத்தகத்தில் ஒரு தவறு குறித்து பொறுப்புடன் ஒப்புக்கொண்டது. அத்துடன், இது தொடர்பில் பொலிஸ் விசாரணை நடத்தப்படும் எனவும் அறிவித்துள்ளது. இது ஒரு பொறுப்புள்ள ஆட்சியின் அடையாளமாகும். அந்த வகையில் இந்த நடவடிக்கையை ஒரு நேர்மறையான முன்னேற்றமாகவே நான் பார்க்கிறேன்.


இதே நேரத்தில், இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதமர் மீது தனிநபர் ரீதியாகவும், அவமதிப்பான மொழிகளிலும் குறிப்பாக அவரது பாலினம் மற்றும் தனிப்பட்ட அடையாளத்தை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

அரசியல் விமர்சனம் என்பது அரசின் கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் நிர்வாக செயல்பாடுகள் தொடர்பாக இருக்க வேண்டும். தனிநபர்களை இழிவுபடுத்தும், அவமதிக்கும் அல்லது மரியாதையை சிதைக்கும் வகையிலான தாக்குதல்கள் ஜனநாயக அரசியல் பண்பாட்டுக்கே எதிரானவை.

எதிர்க்கட்சியின் சில உறுப்பினர்கள் இவ்வாறான நபர்தாக்குதல்களை தங்களின் முக்கிய அரசியல் நோக்கமாக மாற்றிக் கொண்டிருப்பது மிகுந்த கவலைக்குரியது - என்றுள்ளது. (ஐ-02-03-05)

# மீசாலை புகையிரத கடவையில் 7 நாட்களாக இயங்காத சமிக்ஞை

### ஓட்டோ சாரதிகளால் விபத்து தவிர்ப்பு



தென்மராட்சி, ஜன. 09

மீசாலை சந்தி புகையிரத கடவையில் சமிக்ஞை கடந்த ஒரு வாரமாக இயங்கவில்லை. இந்த நிலையில், நேற்றைய தினம் ஏற்படவிருந்த விபத்து அந்தப் பகுதியில் நின்ற முச்சக்கரவண்டி சாரதிகளால் தவிர்க்கப்பட்டது.

நேற்றைய தினம் ரயில் வந்து கொண்டிருந்தபோது கூலர் வாகனம் ஒன்று புகையிரத கடவையை கடக்க முயன்றது. இதனை, அந்தப் பகுதியில் நின்ற முச்சக்கர வண்டி சாரதிகள் அவதானித்து விரைந்து செயல்பட்டு வாகனத்தை தடுத்து நிறுத்தினர். இதனால், நேரவிருந்த விபத்து தவிர்க்கப்பட்டது.

இதனிடையே, அந்தப் பகுதியில் கடந்த 7 நாட்களாக சமிக்ஞை செயல்படவில்லை என்றும் இது தொடர்பில் புகையிரதத் திணைக்களத்துக்கு அறிவித்தபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

புகையிரதத் திணைக்களத்தின் இந்த அசமந்தப் போக்கு அந்தப் பகுதியினரிடையே விசனத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. (ஐ-05)

# பேருந்து சாரதிமீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 09

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை நோக்கி பயணிகளுடன் சென்ற தனியார் பேருந்தை மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் வழிமறித்து சாரதி மீது தாக்குதல் மேற்கொண்டதால் சாரதி ஊர்காவற்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து தமது பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் தாக்குதலாளியை கைது செய்த வேண்டும் என்று கோரி தனியார் பேருந்து சேவை உரிமையாளர்கள் சங்கம் இன்று தீவகத்தில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் மாலை ஊர்காவற்துறை பொலிஸ் ஆளுகைக்குட்பட்ட வேலணை - அல்லைப்பிட்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது. (எ-03)

# கொடிகாமம் பழ வியாபாரிகள் கடைகளை மூடி போராட்டம்!



தென்மராட்சி, ஜன. 09

கொடிகாமம் சந்தை பழ வியாபாரிகள் நேற்று வியாழக்கிழமை தமது கடைகளை மூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த முதலாம் திகதி முதல், சந்தையின் வியாபார நடவடிக்கைகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இருந்த போதிலும், சில வியாபாரிகள், புதிய இடத்துக்கு வருகை தராமையால் தமது வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த கட்டட தொகுதிக்கு, நுகர்வோர் வருகை தராமையால் பழங்கள் பழுதடைந்து போயின என்றும் அவர்கள் கவலை வெளியிட்டனர். (ஐ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் பதுளை மாணவர்க்கு உதவி

வடமராட்சி, ஜன. 09

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பதுளையின் யூரி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 100 மாணவர்களுக்கும் பட்டாவத்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் பயிலும் 143 மாணவர்களுக்கும் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சுவிற்சர்லாந்து நாட்டின் அமைப்பின் நிதிப் பங்களிப்பில் சுமார் 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகர ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதேநேரம், பதுளை மலையக சிறுவர் இல்லத்துக்கு 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாக சென்று வழங்கி வைத்தார். (ஐ-02-08)

# அருளுரை

வடமராட்சி, ஜன. 09

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வில் அருளுரை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சந்நிதியான் ஆச்சிரம மண்ட பத்தில் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலை மையில், நடைபெறும் இந்த நிகழ்வில் "திருவாசகம் என்னும் தேன்" என்னும் தலைப்பில் அருளுரையை சித்த மருத்துவத் துறை மருந்தாளர் த.தவநேசன் வழங்கவுள்ளார். (ஐ-2)

# மன்னார் மருத்துவமனைகளுக்கு பொருட்களை அன்பளித்த ஐ.ஓ.எம்.

மன்னார், ஜன. 09

ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் ஊடாக (ஐ. ஓ. எம். ) மன்னார் மாவட்டத்தில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு ஒரு தொகுதி பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நேற்றைய தினம் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுமார் 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம். எச். எம். ஆஸாத்திடம் கையளிக்கப்பட்டது.

நோயாளர்களுக்கான பொருட்களே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டன. இவற்றை ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் துணைத் தூதுவர் மருத்துவர் சிமியோனெட்டி அசிஸ், ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுகாதார மருத்துவர் ஆர்.எம்.உதீர சரித்ரா ஹரிச்சந்திர ஆகியோர் இணைந்து கையளித்தனர். (ஐ)




# "கந்தரோடை விகாரை" பெயர் பலகை அகற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 09

வலி. தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் "கந்தரோடை விகாரை" என்று குறிப்பிட்டு நாட்டப்பட்டிருந்த பெயர் பலகைகள் அகற்றப்பட்டுள்ளன. குறித்த பகுதி "கந்தரோடை தொல்லியல் ஆய்வு மையம்" என்று அடையாளப்படுத்தப் பட்டமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில், சுன்னாகம் சந்தைக்கு அண்மையாக "கந்தரோடை விகாரை" என்று குறிகாட்டி பெயர் பலகை அமைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த பகுதி தொல்லியல் ஆய்வு மையம் என்றே அடையாளப் படுத்தப்பட வேண்டும் என வலி. தெற்கு பிரதேச சபை அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியது.

இதையடுத்தே, கந்தோடை விகாரை என்று வழிகாட்டும் பெயர் பலகைகள் நேற்றைய தினம் அகற்றப்பட்டன.

இதேவேளை, ஒல்லாந்தர் காலத்துக்குரிய சுன்னாகம் சந்தை கட்டடத்தின் சிறப்பு தொடர்பில் மும்மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டும் அந்தப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.01.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தேவை செயல், சொல் அல்ல

இலங்கையின் வெளிவிவகார அமைச்சரும் ஜே. வி. பி.யின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான விஜித ஹேரத் கூறுகிறார் - “நாங்கள் தமிழ் மக்களை ஏமாற்ற மாட்டோம். அவர்களுக்கான தீர்வை வழங்குவோம்.”. முன்னைய ஆட்சியாளர்களும் இவ்வாறு பேசியிருக்கின்றனர். ஆனால், சந்திரிகா குமாரதுங்க ஒருவர்தான் செயலில் அதனை நிரூபிக்க முயன்றவர். இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒற்றையாட்சிக்கு மாற்றான அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்கு சந்திரிகா முயற்சித்தார்.

இந்த முயற்சியில் அப்போது தமிழர் விடுதலை கூட்டணியின் அரசியல் தலைவர்களில் ஒருவரும் சட்ட நிபுணருமான கலாநிதி நீலன் திருச்செல்வம் பெரும் பங்காற்றியிருந்தார். ஏனைய அனைத்து ஆட்சியாளர்களும் “நாங்கள் தீர்வு தருவோம். எங்களை நம்புங்கள்”, என்று கூறினார்களே தவிர, அதற்காக உளப்பூர்வமான எந்தவொரு முயற்சியையும் மேற்கொண்ட வரலாறில்லை. இந்த அடிப்படையில் நோக்கினால் ஆட்சிப் பொறுப்பை. ஏற்று ஒரு வருடம் சென்றுவிட்ட நிலையிலும்கூட, தமிழ் மக்களுக்கான தீர்வு நோக்கிய பயணத்தில் நம்பிக்கையளிக்கக்கூடிய எந்தவொரு நகர்வையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிரூபிக்கவில்லை.

சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்துக்கும் அநுர குமார திஸநாயக்க அரசாங்கத்துக்கும் இடையில் ஓர் ஒற்றுமையுண்டு. தமிழ் மக்கள் இயல்பாகவே இருவரையும் ஆதரித்திருந்தனர். சந்திரிகாவின்மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். அந்த நம்பிக்கைக்கு அமைவாக சந்திரிகா நடக்கவிலலை என்று கூறிவிட முடியாது.

அடைந்தால் தனிநாடுதான் என்னும் நிலைப்பாட்டிலிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை சந்திரிகாவின் தீர்வு திட்டத்தை ஆதரிக்காமை ஆச்சரியமானதல்ல. ஆனால், தென்னிலங்கையில் தாராளவாதிகள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் சந்திரிகாவுக்கு ஆதரவு வழங்கவில்லை. ஆனால், சந்திரிகாவின் தீர்வு முயற்சிக்காக நீலன் திருச்செல்வம் உயிரையும் இழக்க நேர்ந்தது.

ஆனால், அன்றைய அரசியல் சூழலோடு ஒப்பிட்டால், அநுர குமார திஸநாயக்க அரசாங்கத்துக்கான வாய்ப்பு பிரகாசமாகவே இருக்கிறது. நீண்ட காலத்துக்குப் பின்னர் தமிழ் மக்கள் ஓர் அரசாங்கத்தின்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்திருக் கின்றனர். ஆனால், அவ்வாறு நம்பிக்கை வைத்திருந்த மக்களுக்கான தீர்வு இப்போதும் இலவு காத்த கிளியாகவே தொடர்கிறது. “தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை நாங்கள் வழங்குவோம். எங்களை நம்புங்கள்”, என்று கூறுபவர்கள் இதுவரையில் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. மாகாண சபைகள் தேர்தலை நடத்து வதைக்கூட இழுத்தடிப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

இந்திய எதிர்ப்பின் அடிப்படையில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்துப் பிரசாரங்களை மேற்கொண்டபோது, மாவட்ட சபைக்கு மேல் அதிகாரங்களைப் பெறுவதற்கான தகுதி தமிழர்களுக்கு இல்லை என்னும் நிலைப்பாட்டையே அப்போதைய ஜே. வி. பி. வெளிப்படுத்தியிருந்தது. ஆனால், இன்று ஜே. வி. பி.யின் சக்தி வாய்ந்த பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, தாங்கள் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டில் இல்லை என்று கூறுகிறார். ஏனெனில், அவர் இப்போது ஓர் ஆட்சியாளர். ஆட்சியாளர் அயல் நாடு ஒன்றை எதிர்க்க முடியாது. அவ்வாறு எதிர்த்து ஆட்சியைக் கொண்டுசெல்ல முடியாது என்னும் யதார்த்தத்தை அவர் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார். அப்போதைய ஜே. வி. பி. உண்மையிலேயே மாறிவிட்டது என்றால் - அன்று, இந்திய எதிர்ப்பின் அடிப்படையில் எதிர்க்கப்பட்ட மாகாண சபைகளை இப்போதைய ஜே. வி. பி. எதிர்ப்பதில் எந்தவொரு தர்க்கரீதி யான காரணமும் இருக்க முடியாது.

ஆனால், இப்போதும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்று வருகின்ற போது பழைய ஜே. வி. பி. எட்டிப்பார்க்கிறது என்றால், இப்போது பிரச்னை இந்திய எதிர்ப்பு அல்ல மாறாக தமிழர்களுக்கு மாவட்ட சபைக்கு மேல் பெறுவதற்கு தகுதியில்லை என்னும் நிலைப்பாட்டால்தான் நீங்கள் வழிநடத்தப்படுகிறீர்கள் என்றுதானே ஒரு தமிழர் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இல்லை, நாங்கள் அப்படியாக சிந்திக்கவில்லை - நாங்கள் எந்தவோர் இனவாத அரசியலையும் ஆதரிக்கவில்லை என்பது உண்மையானால் விஜித ஹேரத் கூறுவதை செயலில் காண்பிக்க வேண்டுமல்லவா!

# நன்கொடையாளர் மாநாட்டை உடனடியாக கூட்டவேண்டும்!

### ஹர்ஷ எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜன. 09

டித்வா புயலால் ஏற்பட்ட சேதங்களை புனரமைப்புச் செய்வதற்கு 1,20,000 கோடி ரூபா வரை செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், இலங்கையைக் கட்டியெழுப்பும் நிதியத்துக்கு இதுவரையில் 700 கோடி ரூபா வரையான நிதியே கிடைத்துள்ளது. எனவே, இனியும் காலம் தாழ்த்தாது சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை அரசாங்கம் நடத்தவேண்டுமென்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தினார்.

இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் நிதியம் இன்றளவில் சட்டத்தால் நிறுவப்படவில்லை. பல கோடி ரூபா நிதி பரிமாற்றப் படுகிறது. எதிர்காலத்தில் இது பிரச்சினைக்குரியதாக மாறலாமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வேண்டுகோள் முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டித்வா புயலால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து தேசிய நிதியை மாத்திரம் கொண்டு மீள முடியாது. ஆகவே சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்தவேண்டும். சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்துவதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் அது எப்போது என்று குறிப்பிடவில்லை. உலகில் பிறிதொரு நாட்டில் இயற்கை அனர்த்தங்கள் ஏதும் ஏற்பட்டால் இலங்கை மீதான கவனம் குறைவடையும். ஆகவே இவ்விடயத்தில் அரசாங்கம் விரைவாக செயற்படவேண்டும்.

சட்டத்தின் பிரகாரம் இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் நிதியம் ஸ்தாபிக்கப்படவில்லை. இயற்கை அனர்த்தங்களால் சுமார் 04 பில்லியன் டொலர் அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. ஏற்பட்ட சேதத்தை புனரமைக்க 120,000 கோடி ரூபா வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் இலங்கையை கட்டியெழுப்பும் நிதியத்துக்கு இதுவரையில் 700 கோடி ரூபா வரையான நிதியே கிடைத்துள்ளது.

இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் நிதியம் இன்றளவில் சட்டத்தால் நிறுவப்படவில்லை. பல கோடி ரூபா நிதி பரிமாற்றப்படுகிறது. எதிர்காலத்தில் இது பிரச்சினைக்குரியதாக மாறலாம். ஆகவே இந்த நிதியத்தை சட்டத்தால் நியமிக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்-என்றார். (அ)

## மொனராகலையில் கடும் காற்றுடன் மழை!

கொழும்பு, ஜன. 09

மொனராகலை மாவட்டத்தில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதாக மாவட்ட இடர் முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

இம் மாவட்டத்தில் நேற்று முன் தினம் முதல் பலத்த காற்றுடன் மழை பெய்து வருவதால் பிரதேசத்தில் பல இடங்களில் உள்ள வீடுகள் முழுமையாகவும் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் இடர் முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் இரவு வீசிய பலத்த காற்றினால் வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவில் மஹவெலமுல்ல பகுதியில் மரங்கள் வீதியில் விழுந்ததில் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

தொடரும் மழை மற்றும் காற்றினால் பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாகவும் மிக அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவம் நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மொனராகலை செயலகப் பிரிவிலுள்ள போஹிட்டிய பகுதியில் பலத்த காற்று காரணமாக வீட்டு ஒன்றின் மீது பெரிய மரம் விழுந்ததில் வீடு முற்றாக சேதமடைந்துள்ளது. (அ)

## வெளிநாட்டு கையிருப்பு உயர்வு


கொழும்பு, ஜன. 09

2025 டிசெம்பர் மாத இறுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ மொத்த கையிருப்பு 6.8 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டி உயர்ந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் சமீபத்திய தரவுகளின்படி, நவம்பர் மாத இறுதியில் 6.0 பில்லியன் டொலர்களாக இருந்த கையிருப்பு, டிசெம்பரில் 6,825 மில்லியன் டொலர்களாக உயர்ந்து சுமார் 13 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

அத்துடன், உத்தியோகபூர்வ கையிருப்பின் பிரதான கூறான அந்நிய செலாவணி கையிருப்பும், நவம்பரில் இருந்த 5,944 மில்லியன் டொலர்களிலிருந்து டிசெம்பரில் 6,734 மில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**இடபம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஆதர்வு பெருகும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வாகனத்தை சீர் செய்வீர்கள். நெருக்கம் உண்டாகும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**கன்னி**
கணவன் மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாக பழகுங்கள். மேலதிகாரிகளுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**துலாம்**
உங்களுடைய ஆலோசனை ஏற்கும்படி இருக்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். சாதிக்கும் நாள்.

**தனுசு**
உங்கள் பிடிவாத போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தலைமையின் ஆதரவு கிட்டும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். பொறுமை தேவை.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

# அபிவிருத்தி திட்டங்கள் குறித்து யாழில் விசேட கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஜன. 09


2025 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்திய மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்கள் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் கூறுகையில், "அபிவிருத்தி திட்டங்களை குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சவால்களை ஏற்று நிறைவேற்றிய மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அனைத்து தர உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகள்.

கடந்த வருடம் நிறைவேற்றிய அபிவிருத்தி திட்டங்களை அனுபவமாக கொண்டு இவ்வாண்டு மேலும் வினைத்திறனாக செயல்பட வேண்டும். அதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்"- என்றார். இதேவேளை, கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்திய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இவ்வாண்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பிலும் அரசாங்க அதிபரால் ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதம கணக்காளர், பிரதம பொறியியலாளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# 13 ஆவது தடவையாக யாழ்ப்பாணம் தேசிய மட்டத்தில் முதலிடம் பிடித்தது



யாழ்ப்பாணம், ஜன. 09

ஓய்வூதிய திட்ட நடைமுறைப் படுத்தலில் 13 ஆவது தடவையாக யாழ்ப்பாணம் மாவட்டம் தேசிய மட்டத்தில் முதலிடம் (பணச்சேகரிப்பு அடிப்படையில்) பெற்றுள்ளது.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் செயல்திட்ட மதிப்பீட்டு கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, சிறப்பான அடிப்படையில் அடைவு மட்டங்களை அடைந்து கொண்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மெச்சுரை வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (எ)

# வேலணை பிரதேச செயலகத்துக்கு புதிய உதவி செயலாளர் நியமனம்



யாழ்ப்பாணம், ஜன. 09

வேலணை பிரதேச செயலகத்துக்கு புதிய உதவி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட திருமதி. பாமா மோகனமுரளி நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் ம. பிரதீபனிடம் தனக்கான நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, வேலணை பிரதேச செயலகத்தில் தமது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார். (எ)

# "இலக்குகளை திருப்தியாக மேற்கொள்ள வேண்டும்"

யாழ்ப்பாணம், ஜன. 09

இந்த வருடத்துக்கான இலக்குகளை திருப்தியாக மேற்கொள்ள வேண்டும்- இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் செயல்திட்ட மதிப்பீட்டு கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது,

ஓய்வூதிய திட்ட நடைமுறைப்படுத்தலில் யாழ்ப்பாண மாவட்டம் தொடர்ச்சியாக தேசிய ரீதியாக பெற்று வரும் சாதனைகளை குறிப்பிட்டு உத்தியோகத்தர்களை பாராட்டியதுடன், சமூக பாதுகாப்பு சபையின் திட்ட நடைமுறைப்படுத்தலில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்ட இலக்குகளை எந்தளவில் பிரதேச செயலகங்கள் அடைந்திருந்தமை தொடர்பில் தனித்தனியான கவனம் செலுத்தினார். மேலும், அடைவு மட்டத்தில் திருப்தியற்ற நிலையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இந்த வருடத்துக்கான இலக்குகளை திருப்தியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் அறிவுறுத்தல்கள் வழங்கினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரெட் பயன்பாட்டால் இலங்கையில் வருடாந்தம் 22,000 உயிரிழப்புகள்!

## போதைப்பொருள் தகவல் மையம் தகவல்

கொழும்பு, ஜன. 09

**புகையிலை மற்றும் சிகரெட் பாவனை காரணமாக இலங்கையில் வருடாந்தம் சுமார் 22 ஆயிரம் உயிரிழப்புகள் பதிவாவதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.**

நாட்டில் ஏற்படும் அனைத்து இறப்புகளில் 83 வீதமானவை தொற்று அல்லாத நோய்களால் ஏற்படுகின்றன.

இந்த இறப்புகளில் செல்வாக்கு செலுத்தும் நான்கு பிரதான காரணிகளில் புகையிலை பயன்பாடும் ஒன்றாகும் என மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் சுமார் 1.5 மில்லின் பெரியவர்கள் புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளனர்.

அதேநேரம், உலகளவில் ஒவ்வொரு ஆறு வினாடிக்கும் புகையிலை பயன்பாடு காரணமாக ஒரு இறப்பு பதிவாவதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க குறிப்பிட்டார்.

(அ)

# நாட்டின் 7 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை!

கொழும்பு, ஜன. 09

நாட்டின் 7 மாவட்ட ங்களைச் சேர்ந்த பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் தகவல்களுக்கு அமைவாக, ஊவா, கிழக்கு, மத்திய, வட மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களுக்குள் அமைந்துள்ள ஆற்றுப் படுகைகளில் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இதனால் அம்பாறை, மட்டக்களப்பு, பொலனறுவை, அனுராதபுரம், திருகோணமலை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் உள்ள ஆற்றுப் படுகைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள ஆரம்ப கட்ட எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த மாவட்டங்களுக்குள் உள்ள ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும், ஆறுகளுக்கு அருகாமையிலும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(அ)

# இணைய,சமூக ஊடக மோசடிகளை தடுப்பதற்கு புதிய வேலைத்திட்டம்!

கொழும்பு, ஜன. 09

இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பண மோசடிகள் மற்றும் ஏமாற்று வேலைகளைத் தடுப்பதற்காக புதிய விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு. வூட்லர் இது குறித்து தெரிவிக்கையில்-

இந்த வேலைத்திட்டமானது குற்றப் புலனாய்வுத் திணைக்க ளத்தின் நேரடி வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது.

இணைய வழியிலான குற்றங்களைக் கண்டறியவும், பொது மக்கள் இவ்வாறான மோசடிகளில் சிக்காமல் பாதுகாக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# இளம் வர்த்தகர் கைது!

கொழும்பு, ஜன. 09

7 கோடி ரூபாய் பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் இளம் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

ஜா- எலவைச் சேர்ந்த 24 வயது வர்த்தகரே இவ்வாறு கைதானார். அவர், தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து இந்தியாவுக்குச் சென்று அங்கிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை நேற்று முன் தினம் வந்தடைந்தார்.

அவரிடம் நடத்தப்பட்ட சோதனையில் 7 கிலோ 70 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதான இளம் வர்த்தகரை நீதிமன்றில் முற்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# மதுபான அதிகாரசபை சட்டத்தை மேலும் வலுப்படுத்த திருத்தங்கள்

கொழும்பு, ஜன. 09

தேசிய புகையிலை மற்றும் மதுபான அதிகாரசபை சட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அந்த அதிகார சபையின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



இதன்படி, புகையிலை மற்றும் மதுபானங்களை வாங்குவதற்கான குறைந்தபட்ச வயதை 21 வயதாக உயர்த்துவது, சிகரெட் பொதிகளுக்கு எளிய பொதியமைப்பு முறையை அறிமுகப்படுத்துவது, மின் சிகரெட் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் விதிமுறைகளை மேலும் கடுமைப்படுத்துவது போன்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே படங்களுடன் கூடிய எச்சரிக்கை லேபிள்கள் நடைமுறையில் உள்ள நிலையில், இனி பொதியின் நிறம், வடிவமைப்பு, அளவு, எழுத்துரு உள்ளிட்டவை அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சட்டத்தின் கீழ் மின் சிகரெட் விற்பனையும் விளம்பரமும் தடை செய்யப்பட்டிருந்தாலும், இணைய வழி விளம்பரங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இதனை தடுக்கும் வகையில் உடனடி சட்ட நடவடிக்கைகளை எடுக்க புதிய திருத்தங்கள் உதவும் எனவும் அவர் கூறினார்.

(அ)

# அதிவேகமாக வந்த கார் மோதி 11 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 09

கோர விபத்தில் 11 வயதுச் சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துயரச் சம்பவம் குருநாகல், கல்கமுவ பிரதேசத்தில் நேற்று முன் தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

மேற்படி சிறுவன் சைக்கிளில் வீதியைக் கடக்க முயன்ற போது அதிவேகமாக வந்த கார் அவர் மீது மோதியுள்ளது.விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் உடனே கல்கமுவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர் அங்கு வருவதற்கு முன்னர் உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணையை முன்னெடுத்த பொலிஸார் காரின் சாரதியான 27 வயது இளைஞரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய் தாக்கம் வேகமாக அதிகரிப்பு

## கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை

கல்முனை, ஜன. 09

**அம்பாறை மாவட்டம், கல்முனை பிராந்தியத்தில் டெங்கு நோய் தாக்கம் வேகமாக அதிகரித்து வரும் நிலையில் கல்முனை மாநகர சபையால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

இதன் ஓர் அங்கமாக கல்முனை மாநகர சபை ஆணையாளர் எம். றாபியின் ஆலோசனை, வழிகாட்டலில் மருதமுனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டதுடன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன. அத்துடன் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் வீடுகளில் டெங்கு தடுப்பு பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தது.

அடுத்தடுத்த நாட்களில் ஏனைய பிரதேசங்களிலும் பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று கல்முனை மாநகர சபை ஆணையாளர் றாபி தெரிவித்தார்.

(எ)

# அம்பாறையில் ஐஸ், ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைது

கல்முனை, ஜன. 09

நீண்டகாலமாக உகண பகுதியிலிருந்து அம்பாறை நகரத்துக்கு போதைப்பொருளை கடத்தி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் உட்பட இருவரை ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருட்களுடன் அம்பாறை நகரில் வைத்து கைது செய்துள்ளதாக அம்பாறை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் குழுவினர் அம்பாறை நகர் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், உகண திஸ்ஸபுர கிராமத்திலிருந்து அம்பாறை நகருக்கு போதைப்பொருளை எடுத்துக்கொண்டுசென்ற ஒரு வியாபாரியை டி. எஸ். சேனநாயக்க சந்திப்பு பகுதியில் வைத்து 2,101 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்து அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.


இதன்போது அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அம்பாறை பாலிகா சந்தியில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரான வியாபாரியை 8,757 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்தனர்.

இதில், கைது செய்யப்பட்ட இருவரும் நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(எ)

# நுரை தள்ளும் காத்தான்குடி கடல்



மட்டக்களப்பு, ஜன. 09

காத்தான்குடி கடல் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை முதல் வித்தியாசமாக வெள்ளை நிற நுரையைத் தள்ளி வருவதை அவதானிக்க முடிகிறது.

அண்மையில் வடக்கில் இவ்வாறான நுரையை பாரிய அளவில் கடல் அலைகள் தள்ளி வந்ததை போல இப்போது காத்தான்குடி கடலிலும் நுரை அலைகளூடாக வெளியேறி வருகிறது.

சாதாரணமாக அலைகள் கரைக்கு வந்து செல்வது வழமை. ஆனால், தற்போது வருகின்ற அலைகளூடாக இவ்வாறு பாரியளவில் நுரைகள் தள்ளப்பட்டு கரையிலிருந்து அவைகள் காற்றினூடாக பறப்பதையும் அதிகளவிலான நுரைகள் கரையோரத்தில் தேங்கியிருப்பதையும் காணமுடிகின்றது.

பஞ்சு போன்ற மென்மையான குறித்த நுரைகளை சிறுவர்கள் கையில் எடுத்து விளையாடுவதுடன் காற்றினூடாக குறித்த நுரைகள் மேல்நோக்கி பறப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

(எ)

# பாடசாலைக்கு உதவி



கல்முனை, ஜன. 09

அம்பாறை, கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தின் கல்வி மேம்பாட்டை நோக்கமாக கொண்டு, கல்வி விசேட வேலைத்திட்டத்தின் கீழ் "ஸ்மார்ட் போர்ட்" கையளிக்கும் விழா பாடசாலை அதிபர் எம். ரிஷாத் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கல்முனை மாநகர சபை முன்னாள் பிரதி முதல்வரும் ரஹ்மத் பௌண்டேசன் ஸ்தாபகத் தலைவருமான ரஹ்மத் மன்சூர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். மேலும், கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளருமான அஸ்மா அப்துல் மலீக் கௌரவ விருந்தினராக பங்கேற்று நிகழ்வை சிறப்பித்தார்.

ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்ட இந்த நிகழ்வில், ஏ.ஆர். மன்சூர் தொழில்நுட்ப அறையை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்ததுடன் பாடசாலைக்கான ஸ்மார்ட் போர்ட் ரஹ்மத் மன்சூரால் கையளிக்கப்பட்டது.

(எ)

# கிண்ணியாவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

திருகோணமலை, ஜன. 09

வளமான நாடு - அழகான வாழ்க்கை, தூய்மையான நகரம் - ஆரோக்கியமான வாழ்க்கை டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்று முன்தினம் கிண்ணியாவில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையானது பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச செயலகம், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இணைந்து முன்னெடுத்தது.

மாஞ்சோலை கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் கட்டையாறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் டெங்கு பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. டெங்கு குடம்பிகள் காணப்படும் இடங்கள் பரிசோதிக்கப்பட்டு சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பேரிடருக்குப் பின்னரான சுகாதாரம் மற்றும் டெங்கு ஒழிப்பு மூன்று நாள் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ்

7ஆம் திகதி - ஆரோக்கியமான சூழலுக்கான சமூக அளவிலான டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்,

08 ஆம் திகதி - கல்வி நிறுவனங்களையும் உள்ளடக்கிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்,

09 ஆம் திகதி - அரசு மற்றும் தனியார் துறையினரையும் உள்ளடக்கிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் என இடம் பெறுகிறது.

இதன்படி, இன்று அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் டெங்கு தடுப்பு பரிசோதனை நடைபெறவுள்ளது.

(எ)



# அக்கரைப்பற்று பாடசாலையில் அதிபர் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

## பெற்றோர் நேற்று போராட்டம்

அக்கரைப்பற்று, ஜன. 09

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று கல்வி வலய பதுரியா வித்தியாலய அதிபர் இடமாற்றத்துக்கு எதிராக பெற்றோர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் மற்றும் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் தற்போதைய அதிபர், அதே பாடசாலையில் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்திய பெற்றோர்கள், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் இடமாற்றம் செய்து அனுப்பப்பட்ட சாய்ந்தமருதை சேர்ந்த புதிய அதிபர் பாடசாலைக்கு வரக்கூடாது என்றும் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட பெற்றோர்கள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு எதிராக பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். மாணவர் நலனுக்கு பாதகம் விளைவிக்கும் இடமாற்றம் வேண்டாம், அர்ப்பணிப்புடன் சேவை செய்யும் அதிபரை நீக்க வேண்டாம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

தற்போதைய அதிபரின் தலைமையில் பாடசாலையின் கல்வித் தரம் உயர்ந்துள்ளதாகவும் மாணவர் ஒழுக்கம் மற்றும் கூடுதல் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தூர பிரதேசத்திலிருந்து இங்கு வந்து கடமையாற்றுவது அந்த அதிபருக்கு கஷ்டமான ஒன்றாக இருக்கும் என்பதுடன் பாடசாலையில் முழுமையாக அவரால் அக்கறை செலுத்த முடியாத நிலை இருக்கிறது என்றும் பெற்றோர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில், காரணமற்ற இடமாற்றம் பாடசாலையின் வளர்ச்சியை பாதிக்கும் என அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதுகுறித்து உரிய அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு, மாணவர்களின் நலனை முதன்மைப்படுத்தி தீர்வு வழங்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் கோரிக்கை விடுத்தனர்.

(எ-06)

# சம்மாந்துறைக்கு பிரிட்டன் தூதரக அதிகாரி பயணம்

சம்மாந்துறை, ஜன. 09

இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் துறைத் தலைவர் ரொம்சோப்பர் அம்பாறை- சம்மாந் துறை பகுதிக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை பயணம் மேற் கொண்டார்.

இதன்போது, சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான எம். மாஹிரை அவரது அலுவலகத்தில் சந்தித்து பிரதேச அபிவிருத்தி சமகால அரசியல் நிலைமை மற்றும் அரசாங்கத்துடன் உள்ள ஒத்துழைப்பு தொடர்பில் விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

எதிர்காலத்தில் பிரதேசத்தின் கல்வி உள்ளிட்ட மக்களின் அடிப்படை தேவைகளையும் மேம்படுத்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு அவசியம் தொடர்பில் தவிசாளர் வலியுறுத்தினார்.



இதன்போது, பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் ஆலோசகர் இன்ஷாப் பக்கீர் மார்கர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

(எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்....

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்புக்கும் அம்பாந்தோட்டைக்கும் இடையில் நிலப்பகுதிக்குள் இன்று வெள்ளிக்கிழமை இரவு அல்லது நாளை சனிக்கிழமை அதிகாலை பிரவேசித்தல்.

நகர்வு - 1 இன் ஊடாக பயணித்தால் முன்னரே குறிப்பிட்டபடி வடக்கு மாகாணம் எதிர்வரும் 12ஆம் திகதி வரை மிக மிகக் கனமழையைப் பெறும்( 04 நாள் திரட்டிய மழை வீழ்ச்சி 600 மி.மீ.இனை விட அதிகம்).

நகர்வு 2இன் ஊடாக பயணித்தால் வடக்கு மாகாணம் 200 மி.மீ. திரட்டிய மழை வீழ்ச்சியைப் பெறும். ஆனால், கிழக்கு மாகாணம் எதிர்வரும் 13ஆம் திகதி வரை 350 மி. மீ.இனை விட கூடுதலான திரட்டிய மழைவீழ்ச்சியைப் பெறும்.

நகர்வு 2இன்படி இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நகர்ந்தால் மத்திய, ஊவா மாகாணங்கள் 300 மி.மீ.இனை விட கூடுதலாக திரட்டிய மழை வீழ்ச்சியைப் பெறும்.

ஆனால், நகர்வு -1ஐ விட நகர்வு 2 கிழக்கு, ஊவா, மத்திய சப்ரகமுவா, வட மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களுக்கு மீளவும் பாதிப்பை ஏற்படுத்தும்.

நகர்வு 2இன் மையப் பகுதியான மத்திய, ஊவா, சப்ரகமுவா மாகாணங்கள் அமையும் என்பதனால் மேற்குறிப்பிட்ட மாகாணங்களில் குறிப்பாக கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, கேகாலை, குருநாகல் மாவட்டங்களில் நிலச்சரிவு நிகழ்வுகளுக்கான அதி கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

ஆனால், இந்த நிகழ்வின் நகர்வு பற்றிய இறுதி முடிவை இன்று காலையே தீர்மானிக்கலாம். எனவே, மலையக மக்கள் நிலச்சரிவு அபாயம் தொடர்பில் மிகமிக முன்னெச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## மீனவர்கள்...

இடைநிறுத்தப்பட்டுள்ளன எனவும் யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் ரி. என். சூரியராஜா அறிவித்துள்ளார்.

மேலும், இன்றும் நாளையும் யாழ். மாவட்டத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சி சுமார் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவில் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் அவர் தனது பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவற்றைத் தெரிவித்தார்.

மேலும், வங்காள விரிகுடாவில் தென்கிழக்கு பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக கடல் பரப்புகள் கொந்தளிப்பாக உள்ளன. காற்றும் 60 முதல் 70 கிலோமீற்றர் வேகத்தில் வீசுகிறது. அலையின் தாக்கம் அதிகரித்துள்ளதுடன் 3 முதல் மூன்றரை மீற்றர் அளவில் உயரவும் சந்தர்ப்பம் உள்ளது.

இந்தக் காரணங்களால் யாழ்ப்பாணத்தின் தீவுகளுக்கான கடல் வழி போக்குவரத்து மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது. மீனவர்களையும் கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள் ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் எமக்கு வழங்கப்படும் தகவல்கள் உடனடியாக கிராமமட்ட உத்தியோகத்தர்களுக்கு பகிரப்படுகிறது. அனர்த்தங்கள் தொடர்பில் விழிப்பு நிலையில் சகல விடயங்களும் உள்ளன. எனவே, பொதுமக்கள் அச்சமடைய தேவையில்லை - என்றார். (ஐ)

## 66 அமைப்புகளிலிருந்து...

நாடுகள் சனத்தொகை நிதியம் உள்ளிட்ட 31 ஐ. நா. அமைப்புகளிலிருந்தும், கொழும்பு திட்டம் உள்ளிட்ட ஏனைய 35 சர்வதேச அமைப்புகளிலிருந்துமே அமெரிக்கா விலகியுள்ளது.

அமெரிக்க வரி செலுத்துவோரின் பணம் வீணடிக்கப்படுவதாகவும், இந்த அமைப்புகளின் செயல்பாடுகள் "அமெரிக்கா முதலில்" என்ற கொள்கைக்கும் தேசிய நலனுக்கும் முரணாக இருப்பதாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் இந்த முடிவால் சர்வதேச அளவில் சுகாதாரம், கல்வி, மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த திட்டங்களுக்கு அமெரிக்கா வழங்கி வந்த பெருமளவிலான நிதியுதவி நிறுத்தப்படும் சூழல் உருவாகியுள்ளது.

இலங்கையை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் கொழும்பு திட்டம் போன்ற அமைப்புகளில் அமெரிக்காவின் விலகல் தெற்காசியா, ஆசிய பிராந்தியத்தின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கச்சதீவு...

நடைபெறவுள்ளது. இது தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது இதன்போதே மேற்படி தகவல் வெளியிடப்பட்டது.

மேலும், கடந்த வருடம் இந்தியாவிருந்து 4 ஆயிரத்து 364 பக்தர்கள் உள்ளடங்கலாக 7 ஆயிரத்து 464 பக்தர்கள் வரை கலந்துகொண்டார்கள் என்று நேற்றைய கலந்துரையாடலில் அரச அதிபர் சுட்டிக் காட்டினார்.

திருவிழாவில் பங்கேற்போருக்கான தங்குமிடம், குடிதண்ணீர், உணவு, பாதுகாப்பு, சுகாதாரத் தேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவுக்கான படகு சேவைக்கு ஒரு வழிக்கட்டணமாக ஆயிரத்து 200 ரூபாயும் நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்கு ஒரு வழிக் கட்டணமாக ஆயிரம் ரூபாயும் அறவிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், குறிகாட்டுவானிலிருந்து 46 தனியார் படகுகள் சேவையில் ஈடுபடும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இ. போ. ச., தனியார் பேருந்துகள் யாழ்ப்பாணத்திலிருந்து பெப்ரவரி 27ஆம் திகதி அதிகாலை 4 மணி முதல் மதியம் ஒரு மணி வரை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடும்.

பக்தர்களுக்கு 28 ஆம் திகதி காலை உணவு இலவசமாக வழங்கப்படும். கடற்படையின் ஒழுங்கமைப்பில் கச்சதீவில் ஒரு அம்புலன்ஸ் படகும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களின் ஒழுங்கமைப்பில் 02 அம்புலன்ஸ் வண்டிகள் குறிகட்டுவானிலும் தயார் நிலையில் இருக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.(ஐ)

## ஹரிணிமீதான...

பிரதமர் ஹரிணிக்கு எதிரான நம்பிக்கையில்லா இன்றைய தினம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய அரசின் கல்விச் சீர்திருத்தங்கள் காரணமாக பிள்ளைகளின் கல்வியில் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதனாலேயே, கல்வி அமைச்சருக்கு எதிராக இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படுகிறது என்றும் கயந்த மேலும் தெரிவித்தார். (ஐ)

## கணக்காய்வாளர்...

காலமாக பதில் கணக்காய்வாளர் நாயகம் ஒருவர் கடமையாற்றி வந்த நிலையில், கடந்த ஒரு மாத காலமாக பதில் அதிகாரிகூட இன்றி கணக்காய்வு திணைக்களம் இயங்கி வருகிறது.

ஒரு நாடு ஒரு மாத காலம் கணக்காய்வாளர் நாயகம் இன்றி இயங்குவது மிகவும் பாரதூரமான நிலைமையாகும். தகுதியுள்ள அதிகாரிகள் இருக்கும்போது, அவர்களின் பெயர்களை பரிந்துரைக்க ஜனாதிபதி தயக்கம் காட்டி வருகிறார்.

பதில் கணக்காய்வாளர் நாயகமாக இருந்த தர்மப்பிரிய கம்மன்பில அனைத்து தகுதிகளையும் கொண்டிருந்தும் அவரது பெயரை பரிந்துரைக்காமல் தகுதி குறைந்தவர்களின் பெயர்களையே ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளார்.

இதன் காரணமாகவே அரசமைப்பு பேரவை அந்தப் பெயர்களுக்கு அனுமதி வழங்கவில்லை. கணக்காய்வாளர் நாயகம் இல்லாததால் பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு உள்ளிட்ட பல குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த தணிக்கை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

## 21 பவுண்...

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த வீட்டிலிருந்த மூவரும் உறக்கத்திலிருந்த சமயம் வீட்டின் கதவின் பூட்டை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 21 பவுண் நகைகளை களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுக் காலை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கண்டியில்...

இந்த நிலநடுக்கத்தை மண்டுல்ல, கலாவலை, மஹாவலை, உடபிடவல, தெமண்டியா, பப்புகந்தை பகுதிகளின் மக்களும் உணர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்த நிலநடுக்கம் தொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை. நீர்த்தேக்கங்களுக்கு அருகில் 3.0 ரிக்டர் அளவுக்குக் குறைவான சிறிய நிலநடுக்கங்கள் பொதுவானவை என்று நில அதிர்வு தரவு மற்றும் சுனாமி மையம் தெரிவித்துள்ளது. (ஐ)

## தெற்காசிய...

அண்மையில், இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பொது அமைதியின்மையை சில தீவிரவாத சக்திகள் ஆதரித்து, ஊக்குவித்து ள்ளன.

இந்த நிலையில், தீவிரவாதத்தை எதிர்கொள்வதற்கும் அரசியல் வன்முறைகளை தடுப்பதற்கும் சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் கூட்டு அர்ப்பணிப்பு அவசியம். எனவே, வளர்ந்துவரும் நெருக்கடி நிலைகளை எதிர்நோக்குவதற்கு கூட்டாக பதிலளிக்க வேண்டும். இதற்கு பிராந்திய ஒத்திசைவு அத்தியாவசியம்.

இந்த செயல்பாடுகளுக்கு இந்தியாவின் தலைமைத்துவமானது பிராந்தியத்தின் நீண்டகால அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு மையப்புள்ளியாக அமையும் - என்று நாமல் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## லசந்த...

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஊழலற்ற அரச நிர்வாகத்தை முன்னெடுப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், அரச நிர்வாகத்தில் ஊழல் மோசடி மிதமிஞ்சியுள்ளது. மின் விநியோக கொள்வனவு விலைமனு கோரலிலும் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் (நேற்று) 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. உண்மை வெளிவரவில்லை. லசந்தவுக்கு நீதியை பெற்றுக்கொடுப்போம் என்று குறிப்பிட்டுக் கொண்டே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவுக்கு இந்த அரசாங்கத்தில் நீதி கிடைக்காவிடின் இனி எந்த அரசாங்கத்திலும் நீதி கிடைக்காது. உண்மையை நிலைநாட்டுவதற்கு அரசாங்கத்துக்கு எவ்வித தடைகளும் இல்லை. உண்மையை வெளிக்கொண்டு வர அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (ஐ)

## குளங்களின்...

முத்துஐயன்கட்டு குளத்தின் பராமரிப்பு பணிகள் காரணமாக நீர்மட்டம் குறைக்கப்பட்டுள்ளது. தண்ணிமுறிப்பு குளத்தின் வான் கதவு ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளதுடன், மழை நிலவரத்தைப் பொறுத்து திறப்பு மேலும் அதிகரிக்கப்படும்.

மாதவளசிங்கம் குளம், கனுக்கேணிக்குளம், உடையார்கட்டுக்குளம், விசுவமடுக்குளம், மருதமடுக்குளம் ஆகியன வான்பாய்ந்து கொண்டிருக்கின்றன. தட்டையார்மலை குளம் வான்பாயும் நிலையில் உள்ளது. எதிர்பார்க்கப்படும் கனமழை காரணமாக, வான்பாயும் அளவு அதிகரிக்கலாம். இதனால் குளங்களின் கீழ்ப்பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

குறிப்பாக, கழிவாறுக்கு அண்மையில் மற்றும் தாழ்வான பகுதிகளில் விவசாயம் செய்பவர்கள் இந்த காலகட்டத்தில் நெற்பயிர் நிலங்களுக்கு செல்ல வேண்டாம். தவிர்க்க முடியாத காரணங்களால் செல்ல வேண்டி யிருந்தால், உயரமான பாதுகாப்பான இடங்களை முன்கூட்டியே அடையாளம் காணவும் குறைந்தது ஒரு வாரத்துக்கான உணவுப் பொருட்களை உடன் எடுத்துச் செல்லவும்.

வெள்ள காலத்தில் உணவு வழங்கல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் கடினமாகும் என்பதால் பாதுகாப்பு காரணங்களுக்காக நெற்பயிர் நிலங்களுக்கு செல்லாமல் இருப்பது மிகவும் அவசியம்.

குறிப்பாக, தண்ணிமுறிப்பு மற்றும் நித்தகை குளங்களின் கீழ்ப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும்.

தற்போது அனைத்து குளங்களும் பாதுகாப்பான நிலையில் உள்ளன. நீர்ப்பாசன திணைக்களம் தொடர்ச்சியாக நிலவரத்தை கண்காணித்து வருகிறது. இருப்பினும், எதிர்பாராத கனமழை ஏற்பட்டால் திடீர் வெள்ள நிரம்பல்கள் ஏற்படவும் சந்தர்ப்பம் உள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்த எச்சரிக்கையை கருத்தில் கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பபட்டுள்ளனர். (ஐ)

## வடக்கில் காணி...

பாராளுமன்றத்தின் பாதுகாப்பு தொடர்பான அமைச்சுசார் ஆலோசனை குழு கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் கூடிய இந்தக் கூட்டத்தில், திருகோணமலை, மனையாவெளி பகுதியில் உள்ள "சண்டி குடா" கடற்கரையை பொதுமக்கள் தடையின்றி பயன்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கவும் மீன்பிடிப் பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# பிரதமருக்கு எதிரான பிரேரணைக்கு முன்னுரிமை கொடுக்க அரசு தயார்!

## அமைச்சர் பிமல் சபையில் அறிவிப்பு



கொழும்பு, ஜன. 09

**பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு இணங்க முன்னுரிமை அளிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

அடுத்த பாராளுமன்ற அமர்வுக்கான விவாதங்களை தீர்மானிக்கும் "பாராளுமன்ற விவகாரக் குழுக் கூட்டம்" ஏன் இந்த வாரம் நடைபெறவில்லை என்று எதிர்க்கட்சி எம்.பி. கயந்த கருணாதிலக்க கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிமல் ரத்நாயக்க, இரண்டு முக்கிய சட்டவாக்கங்கள் குறித்த நீதிமன்றத் தீர்ப்புகளுக்காக அரசு காத்திருப்பதாகக் கூறினார்.

அத்துடன், எதிர்க்கட்சியினர் தயாரித்து வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நிலையியற் கட்டளைகளின்படி முன்னுரிமை அளிக்கவேண்டியுள்ளதால், அதனையும் கருத்திற் கொண்டு கூட்டத்தை நடத்த அரசாங்கம் காத்திருப்பதாக அவர் கூறினார்.

பாராளுமன்ற அமர்வு நாட்களிலேயே விவகாரக் குழுக் கூட்டத்தை நடத்துவதுதான் வழமையான நடைமுறை என்று சுட்டிக்காட்டிய கயந்த கருணாதிலக்க, விவாதங்களுக்குத் தயாராவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் போதுமான கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அடுத்த அமர்வு வாரத்திற்கான விவாதங்களுக்குத் தயாராவதற்கு உறுப்பினர்களுக்குப் போதிய கால அவகாசம் கிடைக்கும் வகையில், விவகாரக் குழுக் கூட்டம் விரைவில் திட்டமிடப்படும் என்று பிமல் ரத்நாயக்க உறுதியளித்தார். (அ)

# இலங்கை-ஜேர்மனி இடையே கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம்!

## 188 மில்லியன் யூரோ கடன் நிவாரணம்

கொழும்பு, ஜன. 09

இலங்கை மற்றும் ஜேர்மன் அரசாங்கங்களுக்கு இடையே கடன் மறுசீரமைப்பு செயன்முறை தொடர்பான இரு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில் இந்த ஒப்பந்தம் முக்கிய மைல்கல்லாக அமைவதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன் வழங்குநர் குழுவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் இருதரப்பு கலந்துரையாடல்களில் நிலுவையிலுள்ள கடனை மறுசீரமைப்பதன் மூலம் கடன் நிவாரணம் வழங்க ஜேர்மனி அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இருதரப்பு ஒப்பந்தத்தின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட கடன் தொகை 188 மில்லியன் யூரோக்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# உலகில் 700 மில்லியன் பெண்களுக்கு இன்னும் வங்கி கணக்குகள் இல்லை!

## உலக வங்கி அதிரடி அறிக்கை

வொஷிங்டன், ஜன. 09

உலகளாவிய நிதிநிலை குறித்த உலக வங்கியின் சமீபத்திய ஆய்வின்படி, உலகம் முழுவதும் சுமார் 700 மில்லியன் பெண்கள் இன்னும் வங்கிச் சேவைகளைப் பெற முடியாமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களுக்கு வங்கிக் கணக்குகள், டிஜிற்றல் கொடுப்பனவுகள் மற்றும் ஒன்லைன் பணச் சேவைகள் எட்டாக் கனியாகவே உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் பெண்களின் நிதி பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 இல் 66 வீதமாக இருந்த பெண்களின் கணக்கு வைத்திருக்கும் விகிதம், 2024 இல் 73 வீதமாக உயர்ந்துள்ளது.

2021 இல் 22 வீத பெண்கள் மட்டுமே வங்கிகளில் சேமித்து வந்த நிலையில், தற்போது அது 36 வீதமாக அதிகரித்துள்ளது.

டிஜிற்றல் முறையில் பணம் செலுத்தும் மற்றும் பெறும் பெண்களின் எண்ணிக்கை 50 வீதத்திலிருந்து 58 வீதமாக உயர்ந்துள்ளது.

இலங்கை தொடர்பான பாலினத் தரவு அறிக்கையின்படி, இலங்கையில் 15 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளில் 80.2 வீதம் பேர் முறையான வங்கிக் கணக்கு அல்லது ஒன்லைன் பணச் சேவைக் கணக்கைக் கொண்டுள்ளனர்.

இருப்பினும், 21.4 வீதமான பெண்கள் மட்டுமே வங்கி அல்லது ஒன்லைன் கணக்குகள் மூலம் பணத்தைச் சேமிக்கின்றனர்.

மொத்தமாக 35.3 வீதமான பெண்கள் ஏதோ ஒரு வகையில் பணத்தைச் சேமிக்கின்றனர், ஆனால் மாதந்தோறும் முறையாகச் சேமிப்பவர்கள் 10 வீதம் மட்டுமே என்பதுவும் கண்டறியப்பட்டுள்ளது.

பெண்கள் வங்கி கணக்கு தொடங்குவதற்குத் தடையாக இருக்கும் முக்கியக் காரணிகளாக, கணக்கு தொடங்கத் தேவையான பணமின்மை, அதிகப்படியான சேவைக் கட்டணங்கள், வங்கிகள் வசிக்கும் இடத்திலிருந்து வெகு தொலைவில் இருப்பது, குடும்ப உறுப்பினர்களின் வங்கிக் கணக்கையேச் சார்ந்திருப்பது போன்றன காணப்படுகின்றன.

உலகளவில் கணக்கு வைத்திருக்கும் பெண்களில் பாதிக்கும் மேற்பட்டோர் கைபேசிகள் அல்லது அட்டைகளைப் பயன்படுத்துகின்றனர்.

குறிப்பாக, அரசு வழங்கும் மானியங்கள் அல்லது முதலாளிகள் வழங்கும் ஊதியத்தைப் பெறுவதற்காகவே 60 வீத பெண்கள் தங்களின் முதல் வங்கிக் கணக்கைத் தொடங்கியுள்ளனர் என உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 8 மில்லியன் யூரோக்கள் மானியம்!

கொழும்பு, ஜன. 09

"நிலையான விவசாய நடைமுறைகள் மூலம் பசுமை பொருளாதார வளர்ச்சி" எனும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு 8 மில்லியன் யூரோ மானியத்தை வழங்கும் ஒப்பந்தத்தில் அரசாங்கமும் ஐரோப்பிய ஒன்றியமும் கைச்சாத்திட்டுள்ளன.

மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம் தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்ச, இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் என்பன கூட்டிணைந்து உருவாக்கிய இத்திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் 8 மில்லியன் யூரோ மானியத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு நடைமுறைகளையும், உணவுப்பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையின் மாற்றத்தையும் ஊக்குவிப்பதே இம்முயற்சியின் பிரதான நோக்கமாகும்.

அத்தோடு இளைஞர்கள் மற்றும் பெண்கள் மீது விசேட கவனம் செலுத்தி, இறப்பர் பயிர்ச்செய்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உற்பத்தி வகைகளில் நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு நேயமான விவசாய நடைமுறைகளுக்கு மாறுவதும் இதன் இலக்காகும்.

அதன்படி இந்த இருதரப்பு ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் ஜோஹன் எச்.ஹெஸ்ஸும் நேற்று முன் தினம் புதன்கிழமை கைச்சாத்திட்டனர். (அ)

# அமைச்சர் பதவியிலிருந்து ஹரிணி விலகாவிட்டால் மக்கள் போராட்டம்!

மொட்டு கட்சி எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 09

கல்வி அமைச்சராகவும் பிரதமராகவும் பதவி வகித்து வரும் ஹரிணி அமரசூரிய உடனடியாகக் கல்வி அமைச்சர் பதவியிலிருந்து விலகாவிடின், நாடளாவிய ரீதியில் மக்கள் போராட்டம் வெடிக்கும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

ஒரே நபர் பிரதமர் பதவியையும் கல்வி அமைச்சர் பதவியையும் ஒரே நேரத்தில் வகிப்பது அரசியல் நெறிமுறைகளுக்கும் நிர்வாக ஒழுங்குக்கும் முரணானது.

குறிப்பாக, கல்வித்துறை தற்போது பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில், அதற்கான முழுக் கவனமும் பொறுப்பும் அவசியமாகும்.

கல்வித்துறையில் தீர்க்கப்படாத பிரச்னைகள், ஆசிரியர் நியமனங்கள், பல்கலைக்கழக நிர்வாக விவகாரங்கள் மற்றும் மாணவர்களைப் பாதிக்கும் கொள்கை முடிவுகள் தொடர்பில் அரசின் செயற்பாடுகள் மக்களிடையே பெரும் அதிருப்தியை உருவாக்கி வருகின்றது.

இந்த நிலை தொடருமானால், மக்கள் தங்களது அதிருப்தியை வீதியில் வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

அரசு மக்களின் குரலைக் கேட்காவிட்டால், மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லாமல் போவார்கள். அதற்கான முழுப் பொறுப்பும் அரசின் மீதே இருக்கும்.

கல்வி அமைச்சுப் பொறுப்பை முழுமையாகக் கவனிக்கக்கூடிய தனி அமைச்சரை நியமிப்பதே தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ற தீர்வாக இருக்கும்-என்றார். (அ)

# எஞ்சிய உயர்தரப் பரீட்சை 12ஆம் திகதி முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 09

பேரிடர் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சைகள், எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே இதனை தெரிவித்தார்.


இதன்படி, பரீட்சைகள் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

நாடு முழுவதும் 2,086 பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சைகள் நடைபெறவுள்ள நிலையில், பரீட்சை பணிகளை ஒருங்கிணைக்க 325 இணைப்பு நிலையங்கள் செயற்படும்.

விடைத்தாள்களைச் சேகரிப்பதற்காக 32 பிராந்திய சேகரிப்பு நிலையங்கள் இயங்கும் என பரீட்சைத் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது. (அ)

# 2026 இல் 4 முதல் 5 வீதம் பொருளாதார வளர்ச்சி!

## மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை



கொழும்பு, ஜன. 09

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கைப் பொருளா தாரத்தில் காணப்பட்ட வளர்ச்சி வேகத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டு, 2026 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் சுமார் 4 முதல் 5 வீதம் வரை வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகளின் பயனாகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நேர்மறையான மாற்றங்கள் தொடரும் எனவும், அதன் விளைவாக இந்த வருடம் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.